வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 1096/ஆ5/2025 நாள். 21 .03.2025

பொருள்– பள்ளிக்கல்வி – தமிழ் வளர்ச்சித் துறை – வேலூர் மாவட்டம் – 2024 – 2025 ஆம் கல்வியாண்டு – முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் – செம்மொழி நாள் விழாவாகக் கொண்டாடுதல் – பள்ளி மாணவர்களுக்கு மாவட்ட, மாநில அளவிலான கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்துதல் – சார்ந்து.

பார்வை– தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 45454/எம்1/இ2/2023 நாள். 04.03.2025

-----

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், 2024–2025 ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கையின் போது பின்வருமாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

**"2025 ஆம் ஆண்டு முதல் சூன் திங்கள் 3 ஆம் நாளினை செம்மொழி நாள் விழாவாகக் கொண்டாடப்படும்"**

தமிழுக்கு செம்மொழித் தகுதி பெற்றுத் தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமையைப் போற்றிடும் வகையில் அவர் பிறந்த நாளான சூன் திங்கள் 3ஆம் நாள் தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் செம்மொழிநாள் விழாவாகக் கொண்டாடப்படும். மேலும் செம்மொழியின் சிறப்பையும் முத்தமிழறிஞரின் தமிழ்தொண்டின் பெருமையையும் மாணவர்களிடம் உணர்த்திடும் வகையில் ஆண்டுதோறும் அனைத்து மாவட்டங்களிலும் 11 மற்றம் 12 ஆம் வகுப்பு பயிலும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கும் கட்டுரை, பேச்சுப்போட்டிகள் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்வறிவிப்பின்படி, 2025 சூன் 3 அன்று செம்மொழி நாள் விழா தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கொண்டாடப்படவுள்ளதால், அவ்விழாவில் செம்மொழியின் சிறப்பையும் முத்தமிழறிஞரின் தமிழ்தொண்டின் பெருமையையும் மாணவர்களிடம் உணர்த்திடும் வகையில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்களிடையே முத்தமிழறிஞர் கலைஞரின் தமிழ்தொண்டு, செம்மொழியின் சிறப்பு குறித்த பொருண்மைகள் சார்ந்து கட்டுரை, பேச்சுப் போட்டிகள் 09.05.2025 அன்று அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட அளவிலான போட்டிகள் – பரிசுத் தொகை விவரம்**

| வ.எண் | பரிசு விவரம் | கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டி |
|---|---|---|
| 1 | முதல் பரிசு | ரூ. 10,000/- |
| 2 | இரண்டாம் பரிசு | ரூ. 7,000/- |
| 3 | மூன்றாம் பரிசு | ரூ. 5,000/- |

17.05.2025 அன்று மாநில அளவிலான போட்டி சென்னையில் நடைபெறவுள்ளது

மாநில அளவிலான போட்டிகள் – பரிசுத் தொகை விவரம்

| வ.எண் | பரிசு விவரம் | கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டி |
|---|---|---|
| 1 | முதல் பரிசு | ரூ. 15,000/- |
| 2 | இரண்டாம் பரிசு | ரூ. 10,000/- |
| 3 | மூன்றாம் பரிசு | ரூ. 7,000/- |

வேலூர் மாவட்டம் சார்ந்து மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களின் விண்ணப்பப் படிவங்கள் 25.03.2025 ஆம் நாளுக்குள் தமிழ் வளர்ச்சித் துறை துணை இயக்குநர் / உதவி இயக்குநர் அலுவலகத்தில் இருந்து நேரடியாகவும் தமிழ் வளர்ச்சித் துறையின் http://tamilvalarchithurai.tn.gov.in என்ற இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து விண்ணப்பப்படிவத்தினை நிறைவு செய்து தலைமை ஆசிரியரின் பரிந்துரையுடன் தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேரில் அளிக்க அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு- பார்வையில் காணும் கடித நகல்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்-
அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்
வேலூர் மாவட்டம்.

நகல்-

1. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. உதவி இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை,
   வேலூர் மாவட்டம்
3. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை ), வேலூர் மாவட்டம்
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)